**The Souvenir Published at the time of Nadar Swami Centinery Celebrarion
Edited by Sangendhi Dr. S.Muthu Batter & Dr. S.Sudarshan Bhattar -2009
Kumbhakonam, Oppiliappankoil, Tamil Nadu, India.**

# தஞ்சையில் ஸ்ரீவைகானஸம்

முனைவர். ஆ.வீரராகவன், M.A., BLIS, Ph.D.
ஸம்ஸ்க்ருத பண்டிதர், வெண்ணாற்றங்கரை.

தஞ்சாவூரிலுள்ள ஸ்ரீவைஷ்ணவக் கோயில்களில் ஸ்ரீவைகானஸ ஆகமமுறைப்படி பூசைகள் நடந்து வருகின்றன. ஸ்ரீவைகானஸ ஆகம முறையினை தஞ்சை ஆலயங்களில் ஏற்படுத்தியவர் ஸ்ரீபராசரமுனிவர்.

இச்செய்தி –

பராசரோர்ச்சயாமாஸ ச்ரியாசார்தம் ஜகத்பதிம்/
நீலமேகம் பிரதிஷ்ட்டாப்ய வைகானஸவிதானத://

என்கிறபடியே பரமதார்மிகரும் ரிஷிச்ரேஷ்டரும் ஆன பராசரமுனிவர் உலகநாயகன் திருமகள் கேள்வனாகிய ஸ்ரீநீலமேகப்பெருமாளை ஸ்ரீவைகானஸ ஆகமமுறைப்படி நிறுவி வழிபட்டார் என தஞ்சபுரிமான்மியத்திலும்,

அர்ச்சயன் நீலமேகாக்யம் ந்ருஸிம்மம் விஷ்ணுமவ்யயம்/
உத்ஸவம் காரயாமாஸ வைகானஸ விதானத://
நீலமேகம் பிரதிஷ்ட்டாப்ய ந்ருஸிம்மம் ச ததார்ச்சயத்//

என்றவாறே ஸ்ரீநீலமேகரையும், ஸ்ரீந்ருஸிம்மரையும் ஸ்ரீவைகானஸ முறைப்படி ப்ரதிஷ்டை செய்து உத்ஸவங்களையும் பூசைகளையும் மேற்கொண்டு, வந்தார் என பராசரக்ஷேத்திர மாகாத்ம்யத்திலும் காணக்கிடைக்கின்றது.

ஒரு சமயம் பராசரமுனிவர் இங்கே தவம் மேற்கொண்டு எம்பெருமானை அம்ருத புஷ்கரிணிக்கருகில் லக்ஷ்மீஸமேத கருடவாகனான ஸ்ரீநீலமேகனைக் கண்ணாரக்காண்டார். எம்பெருமானிடம்

மதர்த்தே வித்ருதம் ரூபம் லக்ஷ்மீகருடசோபிதம்/
நீலமேகஸமம் ரூபம் க்ஷேத்ரே சாஸ்து ஸதா மம//
ரிஷயோ தேவதாஸ்சைவ கந்தர்வாப்ஸரஸஸ்ததா/
ஸர்வே திஷ்ட்டந்து சாத்ரைவ மதர்த்தே யே ஸமாகதா:/
க்ஷேத்ரம் மந்நாமகம் சாஸ்து தீர்த்தம் மந்நாமகம் ததா//

(பராசர க்ஷேத்ர மாஹாத்ம்யம்)

என்கிறபடியே தேவரீர் நிலமேகத்திற்கொப்பான திருஉருவங்கொண்டு திருமகளுடன் கூடியவராய் புள்ளூர்திச் செல்வனாய் என் பொருட்டு இங்கே சேவை சாதித்தீர். அப்படியே நீர் ஸதா ஸர்வ காலமும் இங்கே எழுந்தருளியிருக்க வேண்டும். எனக்காகவே இத்தலம் மேவிய ரிஷிகள், தேவதைகள், கந்தர்வர்கள், அப்ஸரஸ்த்ரீகள், போன்றோர் அனைவரும் இங்கேயே இருக்க வேண்டும். இந்த க்ஷேத்திரம் பராசர க்ஷேத்திரம் என்றும், இங்குள்ள தீர்த்தம் பராசரதீர்த்தம் எனவும் என்பெயராலேயே விளங்க வேண்டும் என்று வரம் வேண்டினார். எம்பெருமானும் பராசரர் மொழிக்குச் சம்மதம் தெரிவித்ததால் இத்தலம் பராசர க்ஷேத்திரம் ஆயிற்று. பராசரமுனிவருக்கு கருடசேவையில் திருமகளோடு ஸ்ரீநீலமேகன் காட்சி நல்கியதால் அதனை நினைவு கூறும் வகையில் தஞ்சை துவாதச கருட மகோத்ஸவத்தில் ஸ்ரீநீலமேகன் ஆண்டாளுடன் விண்ணாற்றங்கரையிருந்து தஞ்சை பவனி வருகிறார். இவ்வாறு தஞ்சைக் கோயில் ஸ்ரீவைகானஸ ஆகமத்தை நிலைநாட்டிய பராசரமுனிவர் தஞ்சை

**The Souvenir Published at the time of Nadar Swami Centinery Celebrarion Edited by Sangendhi Dr. S.Muthu Batter & Dr. S.Sudarshan Bhattar -2009 Kumbhakonam, Oppiliappankoil, Tamil Nadu, India.**

- விண்ணாற்றங்கரை ஸ்ரீநீலமேகப் பெருமாள் கோயில் கருவரையினுள் காட்சி தருகிறார். அவர் கண்ட லக்ஷ்மீ ஸஹிதரான நீலமேகன் கருடசேவைக் காட்சிதனை அக்கோயின் ராஜகோபுரத்திலும், கருட விமானத்தின் கீழ்த்திசை விதானத்திலும் என்றைக்கும் நாம் கண்டு வணங்கலாம்.

மேலும் கரந்தை வசிஷ்டேசுவரர் கோயில் கல்வெட்டிலும், தஞ்சை ஸ்ரீராஜகோபாலப் பெருமாள் கோயில் கல்வெட்டிலும் ஸ்ரீவைகானஸர்களைப் பற்றிய குறிப்பு காணக்கிடைக்கிறது.

முதலாம் இராஜராஜனது கல்வெட்டில் — "இவ்வூர் வைகானஸன் காச்யபன் ஸ்ரீவாசுதேவன் ஆராவமுதன்" என்றும், "ஸ்ரீவைகானஸ சூத்திரத்து கௌதமன் கோவிந்தன் சிங்கபிரான்" என்றும் (SII.Vol.V) இருமுறை ஸ்ரீவைகானஸர் குறிக்கப் பெற்றுள்ளனர். அச்சுதப்ப நாயக்கரின் கல்வெட்டில் - "தஞ்சைமாமணி கௌதம கோத்திரத்து வைகானஸ சூத்திரத்து புராணபட்டர் புத்திரன் உலகுய்ய நின்ற பெருமாள்" என்றும், "காச்யப கோத்திரத்து வைகானஸ சூத்திரத்து கோவிந்தபட்டர் நீலமேகர்" புத்திரன் என்றும் இருமுறை ஸ்ரீவைகானஸர் குறிக்கப்பெற்றுள்ளார்.

இந்த இரண்டு தேவஸ்தானக் கல்வெட்டுக் குறிப்புகள் நான்கினுள் இரண்டில் இவ்வூர், தஞ்சை மாமணி என்ற இருசொற்கள் காணக்கிடைக்கின்றன. தஞ்சை மாமணிக்கொயிற் பகுதியைக் காடவன் மாதேவி சதுர்வேதி மங்கலம்" என்று குறிக்கப் பெற்றுள்ள கோனாரிமை கொண்டான் கல்வெட்டில் (SII VOL-223 P.NO.118) கூறப்படும் அக்ரஹாரங்களுள் தஞ்சை மாமணி கண்டங்குரை என்பன ஈண்டு நினைக்கத்தக்கன.

தஞ்சை மாமணி எனக்குறிப்புதரும் கல்வெட்டின் காலம் 1461 (+78+1539) ஆகும். தஞ்சை மாமணிகண்டங்குரை அக்ரஹாரக் குறிப்பு தரும் கல்வெட்டின் காலம் சகம் 1377 (+78 = 1455 ஹக்) ஆகும். கண்டங்குரை என்பது தண்டங்குரை தரண்டலை ஆலங்காடு என்ற தேவாரவாசகத்தில் வைப்புத்லமாகப் போற்றப்பட்ட அக்ரஹாரம் என்பதை - ஊரும் பேரும் நூல் தெரிவிக்கின்றது. இந்த தண்டங்குரை தண்டாங்கோரையாகி தஞ்சையிருந்து வடக்கே செல்லும் குடந்தைச் சாலையில் பள்ளியக்ரஹாரம் கடந்த பின்னே காணப்படுகின்றது.

இவ்விதமாக இக்கல்வெட்டுகளிருந்து கிடைக்கும் இவ்வூர் தஞ்சை மாமணி என்றும் சொற்களை ஆராய்ந்து பார்த்தால் அவ்விருசொற்களும் ஒரு குறிப்பிட்ட பகுதியைக் குறிப்பிடுவதாகவே உணர முடிகின்றது. அதிலும் தஞ்சை வாழ் ஸ்ரீவைகானஸர்கள் அரசாங்கத்தில் பெரும்பதவி வகித்து வந்தனர் என்றும், தஞ்சை மாமணி அக்கிரஹாரத்து வாசிகள் ஆகலாம் என்பதும் அறியவருகின்றது.

தஞ்சைக்கோயில் என ஆழ்வார்களால் மங்களாசாஸனம் செய்யப் பெற்றதும், திருமங்கை ஆழ்வார் உள்ளத்தில் குடிபுகுந்த வம்புலாஞ்சோலை மாமதிள் தஞ்சை மாமணிக் கோயிலை தனது கல்வெட்டுகளில் தனிச்சேர் பெண்மார்களுக்கு நிவந்தம் அளக்குங்கால் ஐந்துமுறை ராஜராஜசோழன் தஞ்சாவூர் தஞ்சை மாமணிக் கோயில் எனக் குறிப்பிட்டுள்ளான். ஆதலால் தஞ்சை மாமணி என்னும் சொல் சோழர் காலந்தொட்டே பயன்பாட்டில் இருந்து வருகிறது. தஞ்சை மாமணி கண்டங்குரை என்பன இருவேறு அக்ரஹாரங்களே என்று முன்னர் அறிதியிட்டுக் காட்டப் பெற்றன.

இதனால் தஞ்சையில் ஸ்ரீவைகானஸம் சோழர்காலத் தொன்மை வாய்ந்தது. தஞ்சை மாமணி என்ற அக்ரஹாரமும் தஞ்சைக்கோயில் எம்பெருமான்கள் முன்பு எழுந்தருளியிருந்த தஞ்சையின் மேற்குபகுதி ஆகலாம் என்பதும் ஊகிக்க முடிகிறது.

* * *